
# திறவுகோல்

2052 பங்குனி
மாத இதழ்



வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.



# தேர்தல் திருவிழா... !

பொய் மூட்டைகள்
ஊர்வலம் போக...!
வெற்று வாக்குறுதிகள்
வீதியில் வலம் வர. ...!
கரன்சி நோட்டுகள்...
கட்டுகளாய் காட்சி தர....!?
வஞ்சக சிரிப்புடன்
வேட்பாளர் பவனி வர...!
வந்துவிட்டது -
தேர்தல் திருவிழா...!?

ஒரு நாள் மட்டுமே
மக்களுக்கு மகுடம் சூட்டி...!
ஆட்காட்டி விரலுக்கு
கருப்பு மைபூசி...!?
ஆண்டு முழுவதும்
முகத்திற்கு கரி பூச...?
வந்துவிட்டது
தேர்தல் திருவிழா..!

வாக்குரிமை விற்று...!
இலவசத்தில் ஏமாந்து...!
இயலாமையில் வீழ்ந்து...!
வாக்குறுதிகளில் மயங்கி...!
தன்மானம் இழக்கும்....?!
தவறினை இனி செய்யோம்...!?
நல்ல ஜனநாயகம் இனி செய்வோம்...!!!?

— முனைவர். சா.சம்பத்
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# அன்பு

அன்பானவர்களிடம் நாம் பேசிய
வார்த்தைகளும் அவர்களின்
வார்த்தைகளும் நிஜத்தைக் கடந்து
அவர்கள் இல்லா நேரம் நினைவாக
தொடர்ந்து கொண்டே இருக்கும்

பேசிய நேரங்களைவிட
பேசாத நேரத்தில் தான்
அவர்கள் மீதான
அன்பும் நினைவும் அதிகரிக்கும்

சில நேரம் அழுகையும்
சில நேரம் சிரிப்பையும் கொடுத்து
இன்றைய சூழலில்
Blockகாகவும் Unblock காகவும்
வாழ்ந்து கொண்டிருக்கிறது
அவர்கள் மீதான அன்பு.

நாம் பரிமாறிய குறுஞ்செய்தி
தினம் படிக்கும் நாளிதழாகும்,
அவர்களின் புகைப்படம்
பேசும் ஓவியமாகும்

அவர்களிடம்  நாம் போடும்
வம்புகள் வாதங்கள் அழகானது
அங்கே தோன்றும் சமாதானமும்
கொஞ்சல்களும் மிகவும்
இனிமையானது  வர்ணிக்க
வார்த்தைகளில்லை,

பிரிவு என்ற சூழ்நிலை  வரும் வரை
அவர்களோடு கடக்கும் நிமிடங்கள்
யாவும் சாதனை வென்ற
சந்தோசத்தினை கொடுக்கும்,

காதல்
வாழ வைப்பதும் அதுதான்
சாக வைப்பதும் அதுதான்
நொடிக்குநொடி
நினைவுகளால் ,
கண்களில் தோன்றி
இதயத்தில் வாழும்  என்றும்
என்றென்றும் காலம் கடந்தும்
நீங்கா நினைவுகளாக காதல்

உறவுகள் எதுவாயினும்
இதுவே நிதர்சனமானது
ஆசைகள் மாறிவிடும் ஆனால்
அன்பு என்றும் மாறாதது.

–
**மெகர்பான் இப்ராஹீம்**
கரிசவயல்

# இலவசம் என்னும் மோசடி அரசியல்

ஒவ்வொரு முறையும் தேர்தல் வந்தால் போதும். ஆளும், எதிர் கட்சிகள் விதவிதமாக, வண்ண வண்ணமயமாக தேர்தல் அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்துவிடுவார்கள்.

அவை எல்லாம் எப்படி இருக்கும் என்றால் இதுநாள் வரை சீரழிந்த ஒரு மாநிலத்தை இனிமேல் தான் புதுப்பிக்க வேண்டும் என்ற ஒரு புதிய கட்சியின் தேர்தல் அறிக்கை போல இருக்கும். இதுநாள் வரை இவர்கள்தானே இந்த மண்ணை ஆட்சி செய்தார்கள் என்ற சந்தேகம் நமக்கு வரும்படி பல நல்ல திட்டங்கள் அதில் இருக்கும்.

இதில் பெரிய வேடிக்கை என்றால் தொடர்ந்து 10 ஆண்டுகளாக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் கட்சி வீட்டுக்கு வீடு வேலைவாய்ப்பு, மது விலக்கு, ஏழு தமிழர் விடுதலை, அந்த மானியம், இந்த உதவித்தொகைன்னு அடிச்சு விடுவார்கள்.

இவ்ளோ நாளா நீங்கதானே இருந்தீங்க. இதையெல்லாம் ஏன் செய்யலன்னு மக்கள் கேட்டுட கூடாதுன்னு கூடவே வரும் பல இலவச கவர்ச்சி அறிவிப்புகள். தொலைக்காட்சி, மிக்சி, மாவரைக்கும் இயந்திரம், துணிதுவைக்கும் இயந்திரம் என்று..

பாமர மக்களும்  நம்மால் வாங்க முடியாத பொருட்களை அரசு நமக்கு கொடுக்கிறதே என்ற பரவசத்தில் வாக்குகளை அள்ளித்தெளித்து விடுகின்றனர். ஒரு நிமிடம், இவையெல்லாம் நாமே வாங்கும் அளவிற்கு நம் வாழ்வாதாரம் ஏன் உயரவில்லை என்ற கேள்வியை எப்போதும் அவர்கள் முன் வைப்பதில்லை.

எனக்கு தரமான இலவச குடிநீர், கல்வி, மருத்துவம் இவை எல்லாம் கொடுத்துவிட்டு ஒரு நல்ல வேலைவாய்ப்பையும் அரசு எனக்கு அளித்து விட்டால் எனக்கு என்ன பிரச்சனை இருக்கப்போகிறது?? என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழுந்தால் அதுவே மாற்றத்திற்கான விதை.

ஒரு சராசரி மனிதன் தன் வாழ்க்கையில் அதிகம் செலவு செய்வது தரமான

கல்வியை பெறவும், மருத்துவத்தை பெறவும்தான் .அதுவே இலவசமாக கிடைக்கும் போது தனி மனித சேமிப்பு உயரும். பின் அதை வைத்து நமக்கு தேவையான அத்தியாவசிய, ஆடம்பர பொருட்களை நாம் வாங்கிக்கொள்ள முடியும். ஆனால் இதைப்பற்றி நாம் பெரிதாக யோசிக்கமறுக்கிறோம். கல்விக்கடன் ரத்து, விவசாயக்கடன் ரத்து மற்றும் இலவச வீட்டு உபயோகப்பொருட்கள் என்ற தற்காலிக தீர்வுகளுக்கே நாம் முன்னுரிமை கொடுக்கிறோம்.

கொஞ்சம் யோசித்து பாருங்கள். கல்விக்கடன் ரத்து, விவசாயக்கடன் ரத்து இவை எல்லாம் வழக்கமாக ஒவ்வொரு கட்சிகளின் அறிக்கையாக இருக்கும் அளவிற்கு கடன் பிரச்னை ஒரு தொடர்கதையாக உள்ளது. ஏன் விவசாயிகளையும், மாணவர்களையும் தொடர்ந்து கடன்காரர்களாக மட்டுமே வைக்க வேண்டும்? என்ற கேள்வி பலர் மனதில் எழுவதில்லை.

தற்காலிக தீர்வு என்றுமே பிரச்சனைகளுக்கான முழுமையான தீர்வை நமக்கு தராது. எப்படி தினம் வரும் தலைவலிக்கு வெறும் மாத்திரை மட்டுமே தீர்வாக நாம் கொள்ளக்கூடாதோ அப்படித்தான் இந்த தள்ளுபடி விடயங்களும்.

இந்த ஆளும், எதிர் கட்சிகள் ஏன் எப்போதும் இலவசம் என்ற தற்காலிகத்தீர்வை நோக்கியே செல்கின்றன, அதற்கான உண்மை காரணத்தை அறிவோம்.

தரமான கல்வியையும், தரமான மருத்துவத்தையும் இலவசமாக கொடுத்தால் அதைச்சார்ந்த பன்னாட்டு மற்றும் உள்ளூர் பெருநிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் பாதிக்கும் என நினைத்து அரசு அதை இலவசமாக கொடுப்பதில்லை.

பெரும்பாலும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் அதிகாரத்தில் உள்ளவர்களின் பகுதிநேர தொழிலாக உள்ளது. அதனால் அவர்கள் வியாபாரம் பாதிக்கப்பட விரும்ப மாட்டார்கள்.

கல்விக்கடன் ஒரு மாணவர் ஏன் வாங்க வாங்க வேண்டும்?? மதிப்பெண் குறைந்தவர்கள் நிர்வாக ஒதுக்கீடு முறையில் பணம் கொடுத்தே சுயநிதி கல்லூரிகளில் சேர முடியும். இப்படி ஒரு வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளவே மாணவர்கள் கடன் வாங்கி அந்த பணத்தை கொண்டு போய் அந்த சுயநிதி

கல்லூரிகளில் கொண்டு போய் கொடுத்து படிக்கிறார்கள்.

தரமற்ற அந்த கல்லூரியில் படித்த பின் அவருக்கு அரசாங்கமும் வேலை கொடுக்காது. வெளியிலும் வேலை கிடைக்காது. பின் கடனாளியாகி அந்த கடனை அடைக்க முடியாமல் தடுமாறுவார். உடனே அரசு மாணவர் நலன் கருதி அந்த கடனை தள்ளுபடி செய்யும். இப்ப வங்கிகளில் இருந்து பணம் எங்கே சென்றுள்ளது என்று பாருங்கள். நேரடியாக கடன் என்ற பெயரில் ஒரு கல்லூரி முதலாளிக்கு வழங்காது இடையில் ஒரு தரகர் போலவே மாணவர்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இறுதியில் பலனடைய போவது யாரென்று உங்களுக்கே புரிந்து இருக்கும். இதே போல தான் இங்கே ஒவ்வொரு இலவசப் பொருட்களுக்கும். ஒரு தொலைக்காட்சி இலவசம் என்றால் அரசே ஒரு தொலைக்காட்சியை தயாரித்து அதை கொடுக்கப் போவதில்லை.

மாறாக ஏதோ ஒரு நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடும். அதற்கு நல்ல வலுவான கமிஷன் தொகையைப் அதிகாரத்தில் உள்ளவர்கள் பெறுவார்கள். அந்த கமிஷன் தொகை பொருளின் தரத்தில் சமரசம் செய்யப்படும். அந்த விடயத்தில் அரசும் அவர்களோடு சமரசம் செய்து கொள்ளும்.

அதனால் தான் இலவசமாக கொடுக்கும் பொருட்களுக்கு உத்தரவாதம் கிடையாது. வெறும் 1200 ரூ க்கு வாங்கும் ஒரு மின் சாதனத்திற்கு (stabalilzer, induction stove) ஒவ்வொரு நிறுவனமும் 3 வருடங்கள் உத்தரவாதம் கொடுக்கும் போது, 3000 ரூ மதிப்புள்ள ஒரு பொருளுக்கு ஏன் உத்தரவாதம் இல்லை.

10ல் 6 பொருட்கள் விரைவில் பழுதடைந்துவிடுகின்றன. அப்படினா அரசு அந்த நிறுவனத்திடம் நட்ட ஈடு கேட்க வேண்டுமே??

இது ஏன் நடைபெறவில்லை எனில், அரசுக்கும் அந்த நிறுவனத்திற்கும் இடையேயுள்ள சமரசம் தான்.

எனவே இலவசம் கொடுப்பதினால் ஒரே நேரத்தில் வாக்குகளையும் பெற்று ஆட்சியையும் பிடிக்கலாம் மற்றும் கமிஷன் முறையில் பணம் நன்றாக ஈட்டலாம் என்று ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறார்கள். எனவே மக்கள் இதற்கு

பின்னே உள்ள மோசடி அரசியலை புரிந்துகொள்ள வேண்டும்.

இன்னும் சிலர் கேட்கலாம். அரசி போன்ற மிக அத்தியாசிய பொருட்களை இலவசமா கொடுத்தால் ஏழைகள் பயன்பெறலாமே என்று.

ஆனால் அரிசியை இலவசமாக கொடுப்பதால் விவசாயம் பாதிக்கும் என்று யாருக்கும் தெரிவதில்லை.

இலவச அரிசியால் பல குடும்பங்கள் நன்மை அடைகிறது என்பார்கள் ஆனால் அந்த இலவச அரிசியை வாங்க வரிசையில் நிற்பது அதை உருவாக்கும் விவசாயிகள் தான்.

விவசாயிகளை சுரண்டி விவசாயிகளை கை ஏந்த வைத்திருப்பது தான் இலவச அரிசி திட்டம்...

தான் உருவாக்கும் பொருளுக்கு உரிய விலை கிடைத்தால் அவன் கை ஏந்த வேண்டிய அவசியமே இருக்காது.

மேலும் இலவச அரிசியை வாங்கி வெளியில் விற்பனை செய்பவர்கள் அதிகம்.

அடிப்படை உணவுப்பொருளை இலவசமாக வழங்குவதில் தவறில்லை. எப்போது??

இந்தியா சுதந்திரம் அடைந்த பொழுதில் பெரும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் உணவின்றி தவித்த 1960களில் கொடுத்து இருக்க வேண்டும். ஆனால் அப்போதே அரிசிக்கு விலை இருந்தது. ஆனால் 50 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது விலையில்லை என்றால் நம் வாழ்க்கைத்தரம் 50 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இப்போது இன்னும் மோசமாகவா உள்ளது??

இந்த இலவச அரசி மக்களின் தேவையா?? அல்லது அரசியல்வாதிகளின் தேர்தல் வெற்றித் தேவையா? என்பதை ஒரு சிறிய தெளிவுபடுத்துதல் மூலம் காண்போம்.

2001 ல் அதிமுக ஆட்சியின் போது அரசி விலை கிலோ 3.50ரூ.

பின் 2006ல் ஆட்சிக்கு வந்த திமுக அதை 2ரூபாயாக மாற்றியது. அதாவது அந்த 5 ஆண்டுகளில் அதிமுக ஆட்சியால் மக்கள் வாழ்வாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது என்று நாம் எடுத்துக்கொள்வோம். எனவே அதிமுக ஒரு மோசமான ஆட்சியை கொடுத்துள்ளது என்று வைத்துக்கொள்வோம்.

ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுகளிலேயே அதை ஒரு ரூபாயாக குறைத்தது. இரண்டே ஆண்டுகளில் மக்களின் பொருளாதரம் இன்னும் கீழே போய் விட்டது போலும்.


பின் 2011ல் மீண்டும் ஆட்சிக்கு வந்த அதிமுக அரசு அரிசியை முற்றிலும் இலவசமாக மாற்றியது. அப்படியென்றால் 2006 முதல் 2011 வரையிலான திமுக ஆட்சியில் மக்கள் இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றுதானே பொருள். இன்றுவரை இலவசம் தான். அப்படியென்றால் 2001ல் 3.50ரூ கொடுத்து ஒரு கிலோ அரிசி வாங்கிய நம் மக்களின் பொருளாதாரம் இன்று இலவசமா பெறும் நிலையில் தான் உள்ளது என்று எடுத்துக் கொள்ளலாமா??

அப்படினா இத்தனை வருடமாக நம்மை ஆண்ட கட்சிகள் கடைசியில் கஞ்சிக்கு கையேந்தும் நிலையில் தான் நம்மை வைத்துள்ளனரா என்பதை சிந்தியுங்கள்.

இலவசத்திற்கு ஒருபோதும் மயங்காமல் நிரந்தர தீர்வை நோக்கி நகர்வோம்.

–

சேந்தில் பக்கிரிசாமி,
மன்னார்குடி.



ஆனந்த்,
கற்பகநாதர்குளம்.



## ஆயிரம் சமாதானங்களை

சொல்லி நகரும்
மனித வாழ்விற்கு
ஒரு புறாவை
அடையாளமாக்கிவிட்டாலும்
பறந்து அமரும் நேரத்தில்
தானியங்கள் வீசுவது யாராக
இருந்தாலும்
சமாதானமாகிப் பறக்கத்
தொடங்கிவிட்டது சில புறாக்கள்
வன்முறை உணர்வோடு
தானியத்தை வீசும்
அதிகாரங்களுக்கு எதிரில்
சிதறிக் கிடக்கிறது
விவசாயி முகங்கள்
தானியத்தை எடுக்காமல்
பறந்து கொண்டேயிருக்கிறது
வன்முறையை எதிர்த்து
சிகப்பு புறா.

## மேக நதியின் ஓசையில்

லயித்துப்போகும் வானம்
நகர்கிறது மௌனத்துடன்
பூமியின் துகள் முழுவதும்
சுற்றித்திரிகிறது
உயிர்ப்புடன்
விதையில் மறைந்திருக்கும்
ஆயிரம் ஆயிரம் நிறங்களில்
பூமியின் நிறமற்ற தன்மை
சுழல்கிறது
காற்றின் பாதையில்
மரங்கள் இளைப்பாறுகிறது
இந்த பிரபஞ்சம் எங்கோ
நகர்ந்துகொண்டு இருக்கிறது
கடலின் இயக்கத்தில்
இளைப்பாறுகிறது மணல்
கடல் நீரில் ஒரு கப்பல் நங்கூரமிட்டு
காத்திருக்கிறது
மீண்டும் இயக்கத்தை ஆரம்பிக்க
எல்லாம் இயங்கிக் கொண்டிருக்கும்
இந்த பாதையில்
நட்சத்திரம் கழன்று
பிரபஞ்ச நதியில் மறைந்தது
பூக்கள் நழுவி மாய நதியில்
மிதக்கிறது.

## அழகான புல்லினமாய்

போதையூட்டும்
தனி அழகில்
பனை ஓலை குடிசை கட்டி
கருவாச்சி நுங்கு சீவி
பிழைத்திருந்தாள்
படுபாவி அதிகாரம்
அணையத் திறக்காமல் விட்டுவிட
ஆழ்குழாயில் பல திட்டம்
தண்ணீரை வெளியேற்றி
பௌதீக களைப்பால்
பனங்குருத்து காய்ந்து போச்சி
பாலைவனமா மாறி போச்சி
தமிழ் நிலம்
ஒத்த பனைமரமாய்
தவித்துப் போனாள் கருவாச்சி
பனங்காட்டு சாலையில
பாதி வழி போகையில
ஒரு வாட்டி நிமிர்ந்து
பனைமரத்தைப் பார்த்து நின்றாள்
குருத்து காய்ந்த காலடியாய்
குடிசை போகும் வழியெல்லாம்
ஒத்தை பனையை ஒத்தாசைக்கு

கூட்டிப்போனாள்
ஓயாமல் அழுது நின்னா
பழுத்த இலை பக்குவமா
பறந்து போச்சி
பல சோகம் மிதந்து போச்சி.

## அழகான சொற்களைப் பிடித்துக் கொள்ளத் தேடுகிறேன்

அது ஆழமாகக் காட்டில் தான் நிரம்பியுள்ளது
உலக மனிதர்களின்
உடலில் மிதக்கும்
காட்டு விதைகளோடு
சுற்றித்திரியும்
இதயத்தின் காற்றில்
காட்டன்பு இல்லாமலா போய்விடும்
நுரையீரல் படலங்களில்
ஒரு காடு உண்டு
நம் உடல் முழுவதும் பாயும்
காட்டு ரத்தத்தில் ஒரு கருணை உண்டு
அந்த ரத்தம் பழகிய அணுக்களாய்
பிரிந்து போன தேசத்தை
பிரிந்து போன மனிதர்களை
பிரிந்து போன காட்டை
இன்னும் வாழ வைக்கப் பிறக்கிறது
ஒன்று சேர்க்கத் துடிக்கிறது
விரல்கள்.

–
ப.தனஞ்ஜெயன்

# கொலைக்காரி

சந்தையில மனச விட்டு
தாலி கட்ட ஏங்கி நின்னேன்....
உனக்கு நான் தாலி கட்ட
ஏங்கி நின்னேன்....
சாயம் போ  சேலையாட்டம் எம்மனச
கரைச்சிபுட்ட..
தாவணி கட்டி வந்த ரத்த நிற
பொட்டுக்காரி...
கட்டழகு உன்ன நெனச்சு உருகி
தவிக்கிறேன்டி...
உன் அழகில் நான்
மயங்கி தவிக்கிறேன்டி....
ஒத்தையடி.. பாதையில
நான் ஒதுங்கி நிற்கிறேன்டி
பக்குவமா பாக்காம போறியே நீ
பாவி மனசும் பதரி தவிக்குதடி
என்மனச பதம் பார்த்து  பதுங்கி
போறியே பாதகத்தி
ஆட்டு மந்தைக் கூட்டத்தில
அருவா மூக்கு கொண்டக்காரி
பாத வழி மறைச்சி... ஆழ் மனதை
அறுக்கும் கொலைகாரி
உன் பார்வ பட்டாலே
நானும் வீழ்வேண்டி
கத்தாழங் காட்டுக்குள்ள
காதல்..மொழி பேசும்
கானாங்குருவி கூட.. உன்
ஓர விழி பார்வைக்காக
ஏங்கி தவிக்குதடி
எம்மனச கசக்கி புட்டு
ஏங்கித் தவிக்க விட்டு
ஊர்தேசம் போறியே நீ...
தண்ணி... குடம் போல
தழும்பி தவிக்கிறேன்டி

சிதறிவிட்ட முத்துக்கள
சேர்த்து தொடுத்து எடுத்து
செம்பருத்தி சரம் தொடுத்து
சாயங்காலம் காத்திருந்தேன்...
சாமம் முழித்திருந்தேன்...
சிதறி கிடக்குதடி
நான் கொடுத்  முத்து எல்லாம்
வாடாத ரோசாப்பூ..
வாசமில்லா மல்லிபூ
வாடிகிடக்குதடி
வாசலிலே வந்து நின்னா
பாதகத்தி உன்முகம்தான்
ஆலன காட்டுக்குள்ள
அடி மனசஅறுத்துப்புட்ட ... அடியே
நீ அடி மனச அறுத்து புட்ட
சந்தையில மனச விட்டு தாலி கட்ட
எங்கி நின்னேன்....

–

ஜெ. நீதிவளவன்,
வடுவூர்.



# பார் போற்றும் காரிகை!!!...

காயங்கள் உன்னை தீண்டும் போதும்
துவண்டு விடாதே பெண்ணே!...
காலங்களை தாண்டிய
காவியம் படைக்க
காயம் கண்ட உன்னால்
மட்டுமே முடியும்...

உன் கற்பனைக்கு உருவம் கொடு
கனவுகள் உன் கற்பனைகளோடு கலந்து காலத்தை முந்த வழிவகுக்கும்....

நீ செய்யும் செயலுக்கு உனக்கு
ஒரு நோக்கம் மட்டுமே....
ஆனால், உன் செயலை ஆயிரம் கண்கள் நோக்கும்....

சில கண்கள் உனக்கு உரம் கொடுக்கும் பல கண்கள் குறைகள் என கூறி உன் அடுத்த வெற்றிக்கு வரம் வகுக்கும்....

பெண்தானே என்று ஆயிரம் அடக்குமுறை உன் மேல் நேர்ந்தாலும்
கட்டுப்பாடு என்னும் கட்டுக்குள்
நீ அடங்கி விடாதே....

காலமும் உன் பெயர் சொல்லும் அளவிற்கு இருக்க வேண்டும் உன் சாதனை....

பார் போற்றும் காரிகை நீதானே!!!....

–



வி. அட்சய ஜோதி,
தஞ்சாவூர்.

# விடியும் வரை காத்திரு

வலிகள் இல்லாமல்
வாழ்க்கையில்லை...
வருத்தப்படுவதால்
பயனுமில்லை...

துன்பத்தைக் கண்டு
ஓடக் கூடாது...
துணிந்து நின்றால்
தோல்வி கிடையாது...

சுடுகிறது என்பதால்
சூரியனைச்
சுட்டு விடுகிறோமா..?
குளிர்கிறது என்பதால்
நிலவை
உடைத்துப் போகிறோமா..?

கசக்கிறது என்பதால்
மருந்தை
தூக்கி எறிகிறோமா..?
இனிக்கிறது என்பதால்
தித்திப்பைத்
தொடர்ந்து உண்கிறோமா..?
இல்லை தானே
பிறகு எதற்கு
உனக்குள் குழப்பம்..!

இன்பம் துன்பம்
கலந்தே வாழ்க்கை...
இதை நீ
உணர்ந்து கொள்வதே
உனக்கு நன்மை...

விடியும் வரை
பொறுமையாய்க் காத்திரு...
விரைவில் எல்லாம்
சரியாகும் நம்பிடு...

–
பாக்யபாரதி,
தகடூர்.

# எந்தன் சிநேகிதியே...

நீ எனக்கானவள்
என்னை போன்றவள்
மௌனம் கூடும்
பேச்சுக்கள் குலரும்
எந்தன் அழகி
மதியினில் ஒன்றும்
மனதினில் ஒன்றும் இல்லா
சில இதயங்களை ரசிப்பவள்

இன்று நெடுந்தூரம் நாமிருக்க
நீ வரவோ நான் வரவோ
சாலையில் வழியுண்டு
வாழ்க்கையின் சூழலில்
வழி வகுக்கவில்லை

உன் கண்ணீர்
என் கவலையோடு நிற்க
என் ஆறுதல்கள்
உன்னை காணா தொலைவில்
காத்துகிடக்கிறது
கட்டி தழுவி அழுதிட, சிரித்திட என
நேரம் கிட்டுமோ!

நட்பின் நினைவுகளை
நினைத்திட ஒரு நாள் வரமாகுமோ
நம் தோள்மீது நாம் சாய புது
நாழிகை பிறக்குமோ

கைகோர்த்து நடந்திட
சிறு தூரம் நம்மை அழைக்குமோ
எனவளே!

கனவிலும் காண ஒரு நல்ல கனா
நமக்கென வாராதோ?
என்றும் நிறந்தம்
இவைதானோ!

–
இப்படிக்கு,
உன் சிநேகிதி,

**கனிமொழி சீனிவாசன்**

அட்டைப்பட
ஓவியம்:



**இரா.மதுவர்ஷினி,**
சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# காதல் மொழி

அவள் தந்த புத்தகத்தில்
தேடியும் காணவில்லை
காதல் கடிதம்

தூக்கியெறிந்தேன்
வெறுமையில் ..

காற்றில் படபடத்து
பறந்து காட்டிய
பக்கங்களில்
எனக்குள்ளும்
எட்டிப்பார்த்தது
வெட்கம்

வட்டமிட்டிருந்தது
பக்கம் எண் - 143.

## ஹைக்கூ கவிதை

பசி மறந்து
மகிழ்வாய் சிறுமி
காதில் வேர்கடலை சிமிக்கி.

தொடையில்
தட்டி தாளம் போடுகிறேன்
பாடும் கொசு.

கோவில் கோபுரத்தில்
ஏறிய குரங்குக்குட்டி
சுரண்டும் புத்தர் சிற்பம்.

கரையில் ஒதுங்கிய
திறந்த மீன் வாய்க்குள்
நுழைகிறது கடல்.

தீப்பந்தம்
அனல் பரவிய அறை
உள்ளங்கையில் தேன்.

இருகால்களை தூக்கி காட்டுகிறது
யானை
எட்டிய மரக்கிளையின் உயரம்.

## புதுக்கவிதை

விளைநிலங்களின் நடுவே
விலைமதிப்பு மிக்கவை
என் வீடு
பால்கனியில் வைத்திருக்கும்
சிறுவாளி.,
தேங்கும் நீரை
பருகிட வரும்
குருவிகள் மற்றும் பறவைகளை
ரசிக்க தெரிந்த
நானே விரட்டிவிடுகிறேன் ..

தேடி வருவதை விட
திரும்பிச்செல்வதையே
அதிகம் விரும்புகிறேன் ..

குருவியினங்களின் சிணுங்கள்களை
அலைபேசியில் பதிந்து
அழைப்புமணியாகவே
வைத்திருக்கிறேன்..

குளிரூட்டும் ஏசி அறை
வெளியேற்றும்
ரசாயன நீரிடமிருந்து
அவைகளை காப்பாற்றும்

ஒவ்வொரு முறையும்
படபடத்து போகும்
என் நெஞ்சம்.

## வேர் வாசம்

திரும்பி பார்க்காமல்
அமர்ந்திருந்த என்னையே
நான் பார்த்துக்கொண்டிருந்தேன்

குட்டிச்சுவரெங்கும்
தொட்டுப்பார்க்கிறேன்
அமர்ந்திருந்த
என் தடத்தை

அவனுக்கு
எப்படி கிடைத்தது
என் வீட்டருகிலுள்ள
காட்டை அழிக்கும்
இயந்திரத்தை இயக்கும் வலிமை

சிதைத்தது
பறவையினங்களின் எச்சத்தால்
விளைந்த நிலம்

மண்டிக்கிடக்கும் முட்புதர்களிடையே
ஒரு ஆறுதல் காட்சி
தலைகாட்டியது காட்டுப்பூவொன்று

சில மரங்களில் ஒளிந்திருக்கின்றன
வேலைபாடுகள் நிறைந்த
மரச்சாமான்கள்

எங்கோ கேட்கிறது
எழுப்பப்போகும் புது அடுக்குமனை
வாசலில் நிறுத்தப்போகும்
பசுவின் சப்தம்

சாய்ந்தன மரங்கள்
கடக்கும் இயந்திர சக்கரத்தில்
வேர்வாசம்

—

சாயிராம்,
தஞ்சாவூர்,
கைப்பேசி: 9443394625.

# தூரத்து பேச்சிலர் ஒருவனின் வாட்சப் குறிப்புகள்

(சிறுகதை)

எதற்கும் பொருளில்லை என்றபோது தான் எதற்கோ என்னைக் கடந்தேன். தனித்ததெல்லாம் தவமா எனும் போது தான் தவித்ததெல்லாம் நான் என்று என்னில் நுழைந்தேன்.

என் மொழியில் பேச வேண்டும் என்று கூட இல்லை. எவர் மொழியிலாவது என்னுடன் பேசுங்கள். பேச்சுகளற்ற பொழுதை கண்ணாடியில் ஒட்டி வைத்திருக்கிறது என் உடல். பாவனையற்ற உடலை என் அலுவலகத்தில் கட்டி வைத்திருக்கிறது காலம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடத்தான் ஊர் விட்டு ஊர் வந்தேன். ஊர் விட்டவன் கால்களில் சுடுதண்ணீர் தான் முப்பொழுதும் கொட்டுகிறது. உரிமை இல்லாத உணர்வோடு தான் ஒவ்வொரு நாளும் விடிகிறது.

வேலை நாட்களில் கூட எவன் கையிலோ வேலென நின்று விடுவேன். விடுமுறை தினத்தில்தான் வெந்து போன விடலை கோழியின் விறுவிறுப்பில்லாத வெட்டவெளியாகி விடுகிறேன். வெறித்த சூனியம் வயதை கூட்டி காண்பிக்கும். பருத்த காருண்யம் வயிற்றில் தொப்பை ஆக்கும்.

சுடு சோறும்... எண்ணெய் கத்தரிக்காயும் அம்மா கையில் உண்ட ஒரு காலம் உண்டு. கையேந்தி பவனில்.. தலை கலைந்த ஓவியமாய் நா நீளும் தலை குனிந்த நாய்களுமாய் பாவனைக்கு அழுகை முட்டும். பேரின்பம் என்பதெல்லாம் கதவைத் திறந்து வைத்துக் கொண்டே சுவரோரம் மூலை குவித்து ஒட்டி அமர்ந்து குலுங்குகையில் உணர்கிறேன். ஓரிடம் விடாத அறை தூதுவன் நானே என்று சிலந்தியிடமும் சண்டைக்கு ஏங்குகிறேன்.

அந்தி வெயில் அசூயை. அதிமதுரம் பிராந்தியானது.

பின் மாலைப் பொழுதில்... ஒரு மனிதனையாவது நேரில் கண்களுக்கு நெருக்கமாய் சந்தித்து விட பயணித்தேன். நீளும் பாதையில்... நாளும் நீளும். நித்திரை வந்து எதிரே வரும் லாரியில் மோதி விட துடிக்கும். ஆனாலும்.. மாத மாதம் அனுப்ப வேண்டிய பணமும் மனமும் பத பதைக்கும். லட்டர் இருந்த காலத்தில் கூட பக்கம் பக்கமாய் பாசம் உருளும். அடிக்கடி பேசும் அலைபேசியில்

சப்பென்று போனது உறவுகள். சரித்திர நிகழ்வுகள் ஒன்று கூட இல்லை. பிறகெப்போதாவது புலம்புவதற்கோ... பெருமை சொல்லி புளுகுவதற்கோ.

"இந்தா..... இங்க இருக்கற கல்கத்தா என்றாகிப் போனது என் தூரம். தூரமே பாரமான போது தூரத்து வெயிலுக்கும் வயதாகிப் போனது. தனித்தே தூங்கும் வயதிலும் நான் இல்லை. தவித்தே விழித்துக் கிடக்கும் வானத்துக்கு ஏது எல்லை. சிந்திப்பது கூட பாதியில் நின்று விடுதல் இயல்பாக நடக்கும். கண்ணாடி பார்ப்பது குறைந்து விட்டதை யாரிடமாவது ரகசியமாய் சினுங்க வேண்டும்.

ஈரமற்ற உடல் எனது. உடலில் ஒரு வேப்ப மரம் வளர்க்கிறேன். உள்ளத்தில் ஒரு வெப்ப சூரியன் முளைக்கிறது. ஊர் உண்டு. உறவு உண்டு. எல்லாமே மாத சம்பள ATM மெஷினுக்குள் பாதுகாப்பாக உண்டு. நல்ல பேர் உண்டு. எனக்குள் நல்ல நான் உண்டு. தனித்து புரளுகையில்.... எல்லாமே புளுகுதல்... எல்லாமே புழுங்குதல்...கண்டும் காணாமல் அடுத்த நாள் அலுவலகம் உண்டு.

புறநகர் பகுதியில்,..... சுடுகாடு தாண்டுகையில்.... ஓர் ஆத்மா கூட எதிரே வராதா.... வந்து வழி மறித்து எதையும் பகிராதா... என்று தோன்றும். மனிதர்களில் நம்பிக்கை அற்ற தருணம் என்று உங்களோடு சேர்ந்து நானும் நம்பக் கூடும். நம்பினோர் கை விடப்பட்டாலும் பரவாயில்லை. அதற்கும் வழியற்ற வாழ்வு வெற்று வயிற்றுக்கும் தனதற்ற வாய்க்குமானது. உழைத்தே வாழ்வது என்பது உழைத்தே சாவதும் தான். பரிமாற வார்த்தையற்ற வாசலில்.... யாருக்கு கோலம்.

நண்பர்கள் குழு வாட்ஸப்பில் இருக்கிறார்கள். கலாய்க்க.... சரக்குக்கு ஊறுகாயாக..... இப்படி இன்னபிற மொக்கை மீம்ஸ்களுக்கு என்னை உபயோகித்துக் கொள்கிறார்கள். ஒருவனுக்கும் உணர்வு பூர்வம் என்பதெல்லாம் என்னவென்றே மறந்து விட்டது. எல்லாமே பிரான்ங் உலகம் தான் அவர்களுக்கு. நெருங்கிய நண்பர்களுக்கோ நான் கல்கத்தாவில் வேலை செய்வது பெரும் பாரத்தை சுமக்க வைக்கிறது. அதிலும்..... ஒரு மெத்த படித்த விஞ்சானி இருக்கிறான். விட்டால் ரயில் ஏறி வந்து விஷம் வைத்து விட்டு கூட செல்வான். என் வெள்ளை கோட் மீது வேக்காட்டு புரளி அவனுக்கு. கேட்டால் உன்னை ஜெயிக்காமல் விட மாட்டேன் என்று உளறுவான். சரி. உளறவாவது ஒருவனுக்கு யூஸ் ஆகிறேன். உண்மையில் மெழுகுவர்த்திக்கெல்லாம் இன்னொரு முறை எரிந்து பார்க்கும் வரம் இருக்கிறது.

ரூம் மேட்.... இருக்கிறான் தான். அவன்.... சக பிணம். அதுமட்டுமில்லை. சதா பிணமும்.

குனிந்த தலையில்.. குவிந்த குரூரம்... அலைபேசிக்கு கொஞ்சமும்... அர்த்த ராத்திரி குளியலறைக்கு கொஞ்சமும். யாதும் ஊரே யாவரும் கேளீர் எல்லாம் சத்தியமாக கிடையாது. தவித்த வாய்க்கு 20 ருபாய் வாட்டர் கேன் தான். மனிதனுக்கு மனிதன் இரண்டடி இடைவெளி வேண்டும் என்கிறது காலம். எனக்கெல்லாம் இருபதடி ஏற்கனவே இருக்கிறது. முகமூடி எல்லாம் ஒரு விஷயமே இல்லை. முகமே முடித்தான் இருக்கிறது எனக்கு. தனித்திருத்தல்.... வருடக்கணக்கில் நிகழ்ந்து கொண்டிருப்பது தான். வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடிய தமிழை தானாக பேசிப் பார்த்துக் கொள்கிறேன். மற்றபடி எல்லாமே மிங்கிலிங் தான். என் அறைக்குள் சதுர உலகம் இருக்கிறது. என் தலைக்குள் இருண்ட கலகம் நடக்கிறது.

இறுகி கல் ஆகி பிறகு கல் என்ற வெறும் சொல்லாகி விடுகிறது... முப்பதைத் தாண்டியும் வீட்டுக்காக வெளியூரில் உழைக்கும் பேச்சுலர் வடிவம்.

–

கவிஜி



## ஜோதி.பழனி அண்ணன்
## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

கபடி தாய் ஈன்றெடுத்த கருப்பு வைரமே
உன் நினைவு நாளை கடக்கும்போது கண்கள் மட்டும்
ஈரமாகவில்லை என் இதயமும் ஈரமாகிறது

உன் அன்பும் பாசமும் அழியாத சின்னம்
நீ விட்டுச் சென்ற ஆடுகளமும் அனாதையின்
வண்ணம்

உன் வீரத்தை விதைத்த இந்த மண்ணில் விளையாட முடியாமல் போனதே என்று
எண்ணி என் மனம் எத்தனையோ முறை மரணத்தை தழுவி இருக்கிறது

உன் புன்னகையில் புயலும் வந்து பூ பறிக்கும்
உன் கம்பீரத்தை காட்டாறும் கடன் கேட்கும்

உன் திறமை என்னும் தீயிலே ஒருமுறை தீக்குளிக்கவா
உன் வீரம் என்னும் விளைநிலத்தில் ஒருமுறை துளிர்விட்டு கொள்ளவா

என் சிறுவயதில் வானூர்தி சத்தத்திற்கு
வளையாத என் செவிகள் உன் புல்லட் சத்தத்திற்கு புன்னகைக்க மறக்காத என்
முகம்

நீ இல்லாமல் புல்லட்டும் புகழ் இழந்து போனதே

ஆயிரம் பயிற்சிப்பட்டறை இருந்தும் பலனில்லை உன் பாதம் தொட்ட மண்ணிற்கு
நிகர்...



என்றும் உன் நினைவுகளோடு....
**கா.அன்பு,**
வடுவூர் புதுகை.

# உயிர் கொண்ட என் பொம்மை !!!

வார்த்தைகளை கடத்தும்
என்னுடைய இக்கவிதைக்கு
சொந்தக்காரன் நீ!

நூறு வகையில்,
நூறு வடிவில்,
நான் விரும்பும் கவர்ச்சி நிறங்களை
கொண்டவன் நீ!

மயக்க நிலைக்கு சென்றாலும்
மதிமுகம்
நினைவில் வரும்
என்னுடைய அழகன் நீ!

என் வலி கண்ட இதயத்துக்கும்
விழி கொண்ட கண்ணீருக்கும் சிறந்த
மருந்தாய் நீ!

என் தனிமையின்
தோழனும் நீ!

என்னுடைய வெட்கத்தில்
விளைந்திட்ட
என் சின்னஞ்சிறு கோபத்தை
தித்திப்பால் சித்தரித்தேன்
உன்னிடத்திலே!

என் முத்தங்கள் ஆயிரம்
உன் முகத்திலே பதியிட
உன் உதட்டு வரிகள் என்னுள்
கலந்திட!


உன் உள்ளத்தில் நிறைந்து
உன் சுவாசத்தில் படர்ந்துக் கொள்ள
இதயமின்றி துடிக்கிறேன் நான்!

இயற்கையும் உன்னிடம் போர்
தொடுக்கும்
தன்னைவிட அழகாய் காட்சி
அளிக்கிறாய் என்று!

உனக்கு உயிர் இல்லாவிட்டாலும்
என்னுடைய உயிருக்கு உயிரானவன்
நீதானே!!!

--

கார்த்திகா இராமதாஸ்,
பொறியாளர்,
வடுவூர் புதுகை.



# கவித்துளிகள்

இமைகளை
பூட்டுவதால்
திறக்கின்றன
- கனவுகள்

மதுக்கடைகளை
திறப்பதால்
மூடப்படுகிறது
ஏழைகளின்
- மகிழ்ச்சி கதவுகள்

ஒருதுளி
மையில் உருவாகிறது
சரித்திரங்கள்
- தேர்தல் நாளில்

நான் விழுவதால்
பிறர் எழுவாரெனில்
விழுந்து கொண்டே
இருப்பேன்
- மழை

பேருந்து நிலையத்தில்
தொலைந்த
குழந்தையொன்றை
தேடியதில்
கிடைத்தார்கள்
அலைபேசியில் அமிழ்ந்து
தன்னை
தொலைக்கும் பலர்

–
நேசமுடன் ஈசு



# துளிப்பாக்கள்

உதிர்ந்த மலர்கள்
வாசம்விட்டுச்செல்கின்றன
பூக்கடையோரம்...

ஒட்டிய வயிற்றில்
விழித்துக்கொண்ட பசி
எழுப்பியது யாரோ?

கலையும் குட்டையில்
அசையும் நிலவில்
முகம்பார்க்கிறேன்
விடியும் வரை..

உடைகள் களைந்ததும்
நாணுகிறதோ
பட்டமரங்கள்..

விவசாய கூடையில்
மடிந்த பயிர்கள்
வெள்ளத்தை ஏவியது யாரோ?

விளையாட மனமில்லை
கடற்கரை வாயிலில்
சுண்டல் விற்கும் பாதங்கள்

வலிகளை மறைத்து
வரிகளை அழகாக்குகின்றன
பேனா முனை.

அடர்ந்த இருளில்
தன்னை மீண்டும்
புதுப்பித்துக்
கொள்கிறதோ
கொஞ்சும் நிலவு...

## நீளும் வரிகளில்

நிமிர்ந்தெழும் புன்னகை
வார்த்தைகள்...

எழுதுகோல் முத்தமிட
தாய்மை அடைகிறதோ
காகிதங்கள்...

தலைகுனிந்த எழுதுகோல்
கசடற பேசுகிறது
நிற்க அதற்குத் தக...

## உழைப்பை விதைக்க

முளைத்தே இருக்கின்றன
பசிகள் மட்டும்

தேனீர் கடைகள்
சூடாகவே இருக்கிறது
ஒளிர்ந்த சூரியன்

சத்தமிடும் குழாயில்
மொத்தமாக நனைகிறேன் ஆனந்த
குளியல்...

## சிலைமீது வைத்தான்

கோரிக்கையை...
கண்திறந்தபோது காணவில்லை
சிலையை...
பத்து செண்டு கழனியில்
இடம்பிடித்தது பத்துமாடி..
உள்வாங்கிய காற்று வயிற்றை தட்டி
எழுப்புகிறது எழுத்துகள் மேலெழும்ப

கொஞ்சும் பொம்மைகள் சிரிக்கின்றன
கெஞ்சும் மழலையிடம் உழைப்பை
விதைக்க முளைத்தே இருக்கின்றன
பசிகள்மட்டும் தேனீர் கடைகள்
சூடாகவே இருக்கின்றன
கடையிலமர்ந்த சூரியன் சத்தமிடு

## முட்கள்

மலர்களால்
சபிக்கப்பட்டவனா?
பறிக்கின்றபோதே
திட்டுகின்றனர்
உன்னைமட்டும்...!

திட்டு வாங்க
பிறந்தவனா நீ
இருந்தாலும்
உன் வீட்டு ரோஜாக்கள்
மங்கையர் கூந்தலில்
அமர்ந்து வேடிக்கை
பார்க்கிறது
வான்வீதியை....!

ஆயுதங்களாய்
உன்னுடல்
அவதரித்ததால்
கவனிப்பாரற்று
காதலிப்பாரற்று
கிடக்கிறாயோ?
தனிமையில்...!

சட்டைப்பையில்
அழகாக அமர்ந்த
ரோஜாவை
தூரம் நின்று
காதலிக்கிறாயோ?

சொல்லிவிடு
உன் காதலை...!

மெல்லிய
ரோஜா இதழ்களை
தாங்கிய
உன்னுடலுக்கு
தீ வைக்க
காத்திருக்கிறது
ஒரு கும்பல்....!

யுகங்கள் பல
கடந்தாலும்
மணம் வீசும்
ரோஜாவிற்கு
காவல்காரன் தான்....!

உன் காவலில்
செடியே
பூத்துகுலுங்குகின்றன..!

தென்றலும்
தொட்டுவிட்டுச்
செல்கின்றன
ரோஜாவை
உன் காவலை மீறி...!

நொடி முட்களாகி
நேரத்தை
கணிக்கிறாய்
செடி முட்களாகி
மலர்களை
படைக்கிறாய்...
படைப்புக்கடவுளா?

சாலையோரம்
வீசப்பட்ட போது

பாதங்களில்
ஏறிக்கொள்கிறாய்
உன்னை
விரட்டுவதற்கு
எத்தனை
அறுவை சிகிச்சை...!

வலிகளை
கொடுப்பதால்
வழியின்றி
முட்களென
உனக்கு பெயர்
சூட்டினார்களோ?

வலிகளை
கடந்து
வழிகளையும்
கொடுக்கிறாய்
நீயும் பிரம்மனே...!

நிராகரிக்கப்பட்டவனாய்
சாலையோரம்
புதர்களாய்
மண்டிக்கிடக்கிறாயே
உன்னிடமும்
தஞ்சமடைகின்றன
பல்வேறு பிராணிகள்...!

ரோஜாவிற்கு
பாதுகாவலனாய்
பூப்படையும்வரை
காத்திருந்தாய்
உன்னையும்கடந்து
பறிக்கின்றார்களே
இரத்தம் சிந்தி...!

உன்போர்களத்தில்
குத்து வாங்கியவர்கள்
கத்திவிட்டுச்
செல்கின்றனர்
தன் பங்கிற்கு
ஒரு சொட்டு
இரத்தத்தை
தானமாக்கிவிட்டு....!

செடியில்
இருக்கின்ற போது
உன்னை
கவனிப்பதில்லை
புதராய்
மண்டியபோது
அடுப்பங்கரை
செல்கிறாய்
தீக்குளிப்பதற்கு.....!

நீயும்
பல யுகங்களில்
தீ குளித்து
கொண்டு தான்
இருக்கின்றாய்
உன்
கோரிக்கைகள்
நிறைவேறியதா?

நீ
நீயாகவே இரு
உன்னை
கடந்தே
முன்னேறுகின்றனர்
உன்னையும்
உதாரணமாக்கிவிட்டு..!

முட்களுக்கு

சொந்தகார
ரோஜாக்கள்
மறப்பதில்லை
உன்னை...!
மனதில் வலியோடு
சுமந்து
செல்கின்றனர்
இன்னமும்
உன்னை மட்டும்...!

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---



T.ஷாலினி,
ஜெயங்கொண்டம்



# அன்பெனும் அகராதியின் அகரமாய்!!!

ஆனந்தமென்னும் உணர்வின் சிகரமாய்!!!

இனிமையை இதழ்களில்
கொண்டாடி!!!!

ஈகையினை மனதினில்
கலந்தோடி!!!!!

உரிமையின் உயிரணுவாய்!!!!

ஊரெங்கும் ஓர் மரபணுவாய்!!!!

எளிமையிலும்
இனிமை மாறாத!!!!

ஏடுகளிலும் காணக்
கிடைக்காத!!!!

ஒற்றுமையின் உயிர் உருவம் மாறாத!!!!
ஓர் கடவுளின் இனிய
படைப்பே உறவுகள்!!!!!

ச.அருள் பிரசாத்,
B.Com, CMA, MDA, DTL,
(GST Practitioner)
சிராங்குடி.

# உரக்கப் பேசுகிறீர்கள்

மெல்ல மெல்லக் கரைந்து
உடைகிறது
ஆழ்நிலை தியானத்தில்
இருக்கும் புத்தனின் மௌனம்.
உங்கள் சொற்கள்
பூரணமாய் அடங்கிய பிறகு
கண் விழிக்கத் தொடங்குகிறான்
புத்தன்.
வனங்களின் இரைச்சலிலும்
பறவைகளின் கூச்சலிலும்
காட்டருவியின் ஓசையிலும்
ஆனந்தமாய் இலயித்தபடி
உங்களுக்கு தியானத்தை
போதிக்கத் தொடங்குகிறான்
புத்தன்.
மனதை ஒரு நிலைப்படுத்தி
தியானம் செய்ய
உங்களால்தான் இயலவில்லை.

## சிறிது தூரத்திற்கு பின்

என் பயணம் இனிதே
நிறைவடையலாம்.
வானில் வலம் வரும்
சூரியன்
பணி நிறைவடைந்ததும்
அந்தியில் மறையலாம்.
தேடலை முடித்த பறவைகள்
மகிழ்ச்சியாய் கூடு
திரும்பலாம்.
இக்கவிதையை வாசிக்காமல்
சிலர் கடந்து போகலாம்.
உங்களில் யாரேனும்
ஒருவர்
இதே கவிதையை
எழுதி முடித்திருக்கலாம்.

## ஜெனித்த சில நொடிகளில்

வாழத் திராணியற்று
ஆயுளை முடித்துக் கொள்கிறது
நீர்க்குமிழி.
சிறு தாக்குதலையும்
எதிர்கொள்ள விழையாத
கண்ணாடி நூறாய்
நொறுங்குகிறது.
பலத்தை நிரூபிக்க வேண்டிய
கட்டாயத்தில்
மோதிய வேகத்திற்கு
சிறிதும் அசராமல் இருக்கிறது
பாறைகள்.
எதையும் தாங்கும் இதயங்கள்
ஜீவனுள்ள மட்டும்
வயிற்றுக்கும் தொண்டைக்கும்
விடாது அலைகிறது.

- உணர்வும் ஆக்கமும்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி; 9443139353



# கடல் நீந்தும் நிலவு

அசைவற்று கிடந்த
அந்த மூன்று நாட்கள் !
அடிவயிற்றில் பிடிப்புடன்,
அன்ன ஆகாரமும் விடமாய் மாற,
துவண்டெழும் போதெல்லாம்,
குருதியுடன் நீந்தி,

எறும்புகளுக்குத் தப்பித்து,
கண்ணீர் கடலுக்குள்
தொப்பென விழும்போது,
உப்புக் கரிக்கும் உதடுகளில்,
உரக்கக் கத்திக் கதறாமல்,
உறைந்து குமுறும்
வேளையிலெல்லாம்,
பாதிவரை நிறைந்திடும் பதட்டமும்!

இத்தனை கொண்டும்
புதுமை படைக்க
புதிதாய் முகிழ்ந்தவள் !
அழகாய்ச் சொன்னால்
ஆழியைப் போன்றவள் !

எம்மாதர் வலிமைதான்
கடல் நீந்தும் நிலவவள் !!!



–
கவிமலர் த. சரண்யா
கொழிஞ்சாம்பாறை,
பாலக்காடு மாவட்டம்,
கேரளா.

# இருள்

தாயின் கருவறை
இருளில் தான்
உயிர் வளரும்
கோயில் கருவறை
இருளில் தான்
பக்தி ஒளிரும்!

கண்கள் மூடி
இருள் சூழ
கனவுலகில் ஒளி பரவும்
விழியற்றோர்களின்
விரல்கள் என்றும்
நிறங்களின் மொழி பேசும்!

பகல் பறவைகள்
இருளிலே கூடடையும்
இரவுப் பறவைகள்
இருளிலே இரைத்தேடும்!

அடர்காட்டின் இருளே
பல்லுயிரைப் பெருக்கும்
இரவு நேர உறக்கமே
மனிதனை இயக்கும்!

விரல் சுமந்த இருள்குறியே
தேசத்திற்கு ஒளி ஏற்றுகிறது!

கூட்டின் இருளில்
தவம் ஏற்கும் புழுவே
வண்ணத்துப்பூச்சியாகிறது.

இருள் சூழ்ந்த வாழ்வு
என்றும் கண்ணீரில் கரைவதில்லை
அங்கே தான் தன்னம்பிக்கை
துளிர்விடுகிறது.

திரண்ட மேகத்தின் இருளாலே
மழை வரும்
இருண்ட பொழுதில்தான்
விடிவெள்ளி முளைக்கும்.

ஆழ்கடலின் இருளிலே
முத்து விளையும்
ஆழ் நிலத்தின் இருளிலே
வைரம் பிறக்கும்.

வெயிலில் இளைப்பாற
இருட்டோவியம்
வரைந்து விடுகிறது மரம்.

பகலை விட இரவில்தான்
வானம் கூட தன்னை
அழகாகக்காட்டிக்கொள்ளும்.

திரியில் எரியும் தீபம் கூட
கைக்கூப்பி
வணங்குகிறது இருளை.

விடியல் சூரியன்
வெள்ளையடித்து
எழுப்புகிறது இரவை.

இங்கே எத்தனை எத்தனை இருள்
அத்தனையிலும் படிந்திருக்கிறது
ஒளியின் நிழல்

இருள் இன்றி
ஒளிக்கு மதிப்பில்லை.
ஒளியின்றி
வாழ்வில் சிறப்பில்லை.



அக இருளை நீக்கி
புற ஒளியை ஏற்றுவோம்!
வாழ்வின் பொருள்
உணர்ந்து போற்றுவோம்!

பெ.விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001

---





நிரஞ்சனா கபிலன்,
375 தெற்குதெரு,
மாங்கொட்டை நத்தம்,
வல்லூர்,
மன்னார்குடி 614017.

# நடு இரவில்

உறக்கம் கலையும்
போதெல்லாம்
கவிதை ஒன்றை
எழுதி விடுகிறேன்...
தூக்கத்தை விட கவிதை
எழுதுவது சுகமாகவே
இருக்கிறது !

**

என்னைப் போலவே
அவளும் கவிதை
எழுதுகிறாள்...
நான் கவிதை எழுதி
கவிஞனாக வாழ்கிறேன்,
அவள் கவிதை எழுதி
கவிதையாகவே வாழ்கிறாள்!

**

பசியால்
மரித்தவனின் கண்கள்
இறுதியாய்
காத்திருக்கின்றன...
ஒரு மனிதனைக் காண!

**

மிச்சம் தர வேண்டிய
சில்லரைக்காக
கடைக்காரர்கள் தரும்
சாக்லெட்கள் உருவாக்கி
விடுகின்றன...
பெயர் தெரியாத
குழந்தைகளின் நட்பை!

**

பசியால்
மயங்கி விழுந்தவனுக்கு
தண்ணீர்
தந்து கொண்டிருக்கிறது...
மனிதநேயம் !

**

ஒவ்வொருவருக்கும்
புரியும்படியே
எழுதிக் கொண்டிருக்கிறேன்...
எனது கவிதைகளை,
புரியாமல் தொடரும்
வாழ்க்கைப் பயணத்தில்!

**

மனிதர்களின் பிள்ளைகளாக
பிறந்து
கடவுளின்
பிள்ளையாகிறார்கள்...
ஆதரவற்ற மனிதர்கள்!

***

மிதிவண்டிப் பயணம்
சுகமாக இருக்கிறது...
எரிபொருள் வாங்க முடியாத
ஏழைகளுக்கு!

***

வீட்டில் வளர்க்கும்
பூச்செடிகளில்
நாள் தவறாது வந்தமர்ந்து
தேன் குடிக்கும்
வண்ணத்துப்பூச்சியை ரசிக்கும்
மகளுக்கு,
மழைநாளொன்றில்
வராத வண்ணத்துப்பூச்சிக்காக
சபித்துக் கொண்டிருக்கிறாள்....
கண்ணில் பெருமழையோடு
ஒரு மழையை!

***

இடையூறுகள்
குறைவாக இருப்பதாலே
இன்னும்
பறந்துகொண்டிருக்கின்றன...
ஆகாயத்தில் பறவைகள்!

**

பல வருடங்களாய்
ஓட்டு போட்டுக் கொண்டே
இருக்கிறார்கள்
ஏழை மக்கள்,
ஒட்டுப்போட்ட ஆடைக்கு
மாற்றாய்
உடைகள் இல்லாமல்!

–
மு.முபாரக்



# உறக்கத்தின் அகன்றவாய்

வாசித்த மாத்திரத்தில்
எளிதாய் கவர்ந்துவிடுகிற
திறனார்ந்த கவிதையொன்றை
இரவின் மைநிரப்பி
எழுதத் துவங்குகிறேன்
விளையாட அழைத்துக்
கொஞ்சமும் நகராத வேதனையில்
பூக்களின் இதழ்கிழிந்து
அருவியாய் பெருகும்
செல்ல அவனின்
அழுகையால் பிசுபிசுத்து
நமுத்துப்போய் துவங்குகிறது அது
எரிவாயு தீர்ந்துபோய்
விறகடுப்பில் போராடி சமைத்த
தோசையும் தக்காளி சட்னியும்
பற்றியதான சுவைகுறிப்பு வழங்க
மௌனித்திருந்த என்மேல்
மாண்புமிகு அவளின் கோபத்தால்
விரல்களைச்சுட எரிதழல் ஏந்தும்
கணிதப்பாடத்தின்
விளங்காத கணக்குகளைத் தெளிய
கனிவோடு அருகில் நெருங்கும்
கண்டுகொள்ளாது விட்ட
எட்டாம் வகுப்பு மகளின்
சிறிய முகசுளிப்பால்
மூச்சைத் தினறும் நிச்சயம்
சோறிட்ட நன்றிக்காய்
நாக்கையும் வாலையும் குழைத்துப்
புதிய யோசனைகளைத்
துளிர்க்காமல் தடைசெய்யும்
மொட்டைவால் பைரவரின்
அடாவடி நேயத்தால் குறுக்கிடும்
சிலநேரம்
தொண்ணூறைக் கடந்தும்
சுருங்கிய தோல்தவிர்த்து
எவ்வித நோயும் அண்டாமல்
வெற்றிலை போட்டுக் குதப்பும்
அப்பத்தாளின் பொக்கைவாய்
சிரிப்பொன்று
இறுதியடியின் வேர்களை
பிடுங்கியெரிலாம்
ஜன்னலின் வெளியே
திருவிழாவில் தொலைந்த அத்தனை
வார்த்தைகளையும் தேடித்துழாவி
பூக்களின் சரமாய்
தங்களின் மேலான பார்வைக்குப்
படையல் செய்கிறேன்
தனித்து வாசிக்க இயலுந்தானே
உறக்கம் விழுங்கவரும் உங்களால்.

## புளித்த வாசத்தின் நெடி

முயன்றும் தரிசிக்க வழியில்லா
தூசடர்ந்த முதுகின் சுவற்றில்
குருதியின் மைகொண்டு
தீட்டிடடும் ஓவியங்கள்
யார்கண்ணால் இரசிப்பன
சூறாவளியுடன் புழுதிசேர்ந்து
நாடோடியாய்த் திரியும் பாலையில்
வாழ்வின் புதையல்கள் தேடி
நீளும் பயணம்
தொண்டைக்குள் மூட்டுகிறது
இலையுதிர் காடொன்றின்
பெருந்தீயை
வைத்தக்கண் விலகாமல்
அவர் நோக்கிடும் பார்வையில்
கூரிய முள்ளொன்று
குறிவைத்துக் காத்திருந்து

மேல்மூச்சும் கீழ்மூச்சும் தடதடக்க
விரைந்திடும் சூம்பிய கால்களைக்கீறி
உயிரருந்தி ஏப்பம் விடுகையில்
புளித்தவாசத்தின் நெடி
காற்றின் நாசியில் விசந்தூறும்
மீளவழியில்லாப் பாதைகளில்
அலைந்து திரிந்து
ரேகைகள் தேய்ந்த பாதங்களை
இறுதியாய் கட்டிவைத்து
வழியனுப்பும்
சிறுநீளக் கயிற்றில்
ஊஞ்சலாடி செல்கிறது
வாழ்வின் ஆறாத இரணம்.

## யாமத்தின் பேராவல்

ஓநாயின் கூரிய வாயால்
மெதுவாய் நெருங்குகிறது
முன்னிரவின் சப்தங்களை
விழுங்கி ருசித்திட
யாமத்தின் பேராவல்...
பூரணக் கனவைத் துரத்தி
இலக்கையடையும் இலட்சியத்தில்
வானில் நிரம்பி தண்கதிர் பொழியும்
மூக்கும் முழியுமாய் வெண்ணிலா...
உறங்கும் விழிகளின்
மூடிய அறைகளுக்கு வெளியே
புதிதான நாற்றம் நுகர்ந்து
வீதியதிர குரைத்துச்
செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும்
தெருநாய்கள்...
சுவர்க்கோழிகளின் ஏகவசனத்தில்
துளியும் ஆர்வமின்றி
செவிகள்மூடி உலவும்
எலிகளின் பாதையில்
மீசையை முறுக்குகிறது
கற்றாழைத் தொட்டியின்பின்
பழுப்புநிற பூனை...
வெளிச்சம் அரசாண்ட பகலெல்லாம்
பாதுகாத்த உத்தமம் களைத்துத்
துச்சாதனனின் கைகளில்
மெல்ல மலர்கிறது
மிச்சமுள்ள வாழ்நாளை
சிலுவையிலிருந்து மீட்க
உறவின் கரங்கள் உதறிய
செந்தாமரையொன்று!

–
பொன். தெய்வா
ஐவேலி.



# அஃறிணை பேசுகிறது

பூச்சிகளின் பூமி இது
பூச்சிகளின் பூமி
ஆறறிவு கொண்ட இனம்
பரிணாமம் அடைவதற்கு முன்புவரை
இது பூச்சிகளின் பூமி

ஆளப்பிறந்தவர்கள் நாங்கள் என
பாழாய்ப்போன அந்த இனம்
படை எடுக்கும் முன்புவரை இது
பல்லுயிர்களின் பூமி

வேட்டை சமூகமென
நீங்கள் விரவிக் கிடக்கையில்
நாமெல்லாம் ஓரினம்
இது நமக்கான பூமி

உணவு சேகரிப்பில் சமுதாயம்
இருந்தவரையில்
இது எல்லோருக்குமான பூமி
உணவு உற்பத்தியில் நீங்கள்
இறங்கியபோது
இது உங்களின் பூமியானது

எங்கள் காடுகள் திருத்தப்பட்டு
கழனியாகின
நாங்கள் அந்நியமானோம்
கழனிக்காக உங்களுக்குள் போட்டி
வந்தது
நாங்கள் எதிரிகளானோம்
நீங்கள் மட்டும் செழித்தோங்க
எங்களில் எவரையும் அழிக்கத்
துணிந்தீர்கள்

எங்கள் அறிவையெல்லாம் களவாடி
அறிவியல் என்றீர்கள்
எங்கள் நுண்ணுணர்வைப் படித்து
உள்ளுணர்வு என்றீர்கள்

எங்களோடு இயற்கை படித்து
வானியல் என்றீர்கள்
எங்களைத் துரத்தித் துரத்தியே
புவியியல் கற்றீர்கள்

கறையானிடம் கட்டடக்கலை
நத்தையிடம் உணரிகள்
சிலந்தியிடம் நெய்தல்
தும்பிடம் உலங்குஊர்தி
மின்மினியில் மின்சாரம்
மரவட்டையில் தொடர்வண்டி

இப்படி எங்கள் அறிவைக்
கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்து
விஞ்ஞானம் சமைத்தீர்கள்

இன்று வளர்ந்துவிட்ட சமூகமாம்
நீங்கள்
எங்களின் விபரச் சேகரிப்புகளை
எல்லாம்

எங்களுக்கே எதிரியாக்குகிறீர்கள்
அறிவியல் தரவுகள் எழுதி –
எங்களை
அழிக்கப் பார்க்கிறீர்கள்

மெத்தப் படித்த மனித இனமே!
ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் என
தரம் பிரித்து வைத்திருக்கும்
உங்கள் மேதமைக் கண்ணாடியைக்

கழட்டிவிட்டு
சக உயிரியாய் எங்களை
அணுகுங்கள்

இது பல்லுயிரிகளின் பூமி
பல்லுயிரிகள் வாழ்ந்தால்தான் பூமி
ஒரே ஒரு மதிப்பெண் கேள்வியாய்
நீங்கள் படிக்கும் உணவுச்
சங்கிலியைக்
கொஞ்சம் உற்று நோக்குங்கள்
உணவுச் சங்கிலி அறுந்தால்
உங்கள் உலகம் வாழாது

எங்களின் இடையூறுகளைப்
பொறுத்துக் கொள்ளுங்கள்
நன்மைகளைப் பட்டியலிடுங்கள்
பணத்திற்கான பாடங்களுடன்
பல்லுயிர் வாழ்வையும் கொஞ்சம்
படியுங்கள்

அறிவோடு மட்டுமின்றி
கொஞ்சம் அறமோடும் சிந்தியுங்கள்
எங்கள் காட்டையும் எங்கள் மீது
காதலையும்
அதிகப்படுத்த உறுதி கொள்ளுங்கள்

முற்கந்தெறிக்கும் பல்லிகளைக்
கண்டு
முகம் சுழிக்காதீர்கள்
நுண்ணுயிரிகளால் வரும் உதட்டுக்
கொப்புளங்களுக்கு
பல்லி மீது பழி போடாதீர்கள்

கதாநாயகியைப் பயமுறுத்த மட்டுமே
உருவெடுத்ததாய் ஊடகங்கள்
காட்டும்
கரப்பானை வெறுக்காதீர்கள்

எலுமிச்சை நறுமணத்தில்
புதிதாய் வந்திருக்கும் பூச்சிக்கொல்லி
தெளித்து
கொன்றுவிட்டு வென்றுவிட்டதாய்
புளகாங்கிதம் அடையாதீர்கள்
இரக்கப்படுங்கள் அவற்றின்மீது.

தன் எதிரியைத் தன் முதுகிலேயே
தெரியாமல் சுமக்கும்
அப்பாவி உயிரினம் அது
உங்கள் தொழிலாளி இனத்தைப்
போல!!!

பட்டாம் பூச்சியைப் பிடித்துப்பார்த்து
ரசிக்காமல்
மனம் பிடித்து, பார்த்து ரசியுங்கள்
பூச்சிகளை அருவருக்காத
அடுத்த தலைமுறையை
உருவாக்குங்கள்

காலுக்கடியில் கரையான் புற்று
பார்த்தால்
பாதை மாறி நடக்கலாம் தப்பில்லை
உதிர்ந்த ஈசல் சிறகு பார்த்தால் -
அவற்றின்
ஒரு நாள் இன்பத்திற்காக
வருந்துங்கள்

கொடுங்கோடையில் கொஞ்சம் நீரை
குருவிகளுக்காக வெளியில்
வையுங்கள்
போத்தல் நீரில் நீங்கள் தாகம்
தணிக்கலாம்
யானைகள் என்ன செய்யும் பாவம்!

பொதுவுடமையை எங்களுக்கும்

சேர்த்துப் பேசுங்கள்
இது பல்லுயிரிகளின் பூமி
பல்லுயிரிகள் வாழ்ந்தால்தான் பூமி

பொதுவுடமையை எங்களுக்கும் சேர்த்தே பேசுங்கள்.

–
சேவல்குளம் செல்வராசு

---




T.ஷாலினி
ஜெயங்கொண்டம்

# பெண் வேண்டும்!

"பேண்" எனும் பொருளாகி வந்த
பெயரன்றோ பெண்? - இப்
பெயரைப் பொருத்துமுற
பெண்ணுக்குச் சூட்டியவர் யாரெனப்
புரியாமல் வியக்கிறேன் நான்!

ஆம், அண்டந்தனில் காணும்
அனைத்திலும் காண்பதும்
அனைத்தையும் காப்பதும்
பெண்ணென்று கூறினால் பேதமதிலுண்டோ?

ஐம்பெரும் இயற்கையின் சக்திகள் தான் அண்டசராசரத்தின்
இயக்கங்க ளனைத்திற்கும்
அடிப்படை யென்பதே
அறிவியல் மெய்மை!

அவற்றுள் மென்மையாய்த் திகழ்பவை யாவுமே
தென்ற லென்றும் தீப மென்றும்
நிலமகள் நீர்மகள் வான்மக ளென்பனவாய்
பெண்மையின் வடிவங்களாய்!

ஆக்க சக்தி களனைத்திற்கும்
அடிப்படை பெண்தான் என்று
ஆதிமனிதனும் கருதியதால் தானோ
"தாய் தகப்பன்" என்பதிலும் தாய்க்கே முதலிடம்!

இன்று
அறிவியல் வளர்ச்சி
ஆயிரம் அற்புதங்களை
நிகழ்த்திக் கொண்டிருப்பது நிஜம்...

அதிலே
ஆண் பெண் சங்கமம் தேவையின்றி
கண்ணாடிக் குப்பிக்குள்

கரு உற்பத்தி செய்வதுவும்
அடங்கும்!

ஆயினும் கூட
உருவான கருவை
உயிராக்கித் தருவதற்குத்
தாயின் கருவறை
தவிர்க்க இயலா தேவை!

உலக உயிர்க ளனைத்துமே
தத்தம்
இன வளர்ச்சியை எண்ணியே
இயங்குகின்றன...

ஆனால், மனித இனம் மட்டுமே
பெண்சிசுக் கொலைக ளெனும்
பெரும் பாதகத்தால்
தன் இனத்தைத் தானேயழித்து
மண்ணுலகில் வேரறுக்கப்
பார்க்கிறது...

'கோடரிக் காம்பு' கூட குற்ற
மற்றதாகிட
இனத் துரோகி யாய்
இலங்கு கிறாயே மனிதா!

ஆம்,
ஆண் பிறவாத போதும்
அறிவியல் தந்த "உயிரணுப்
பாதுகாப்பு"
மனிதம் உயிர்க்க வழி செய்யும்...

ஆனால்-
இன்றைய சூழலில்
பெண் பிறவா நிலையில்
பூமியில்
மனிதம் மரித்து விடும் - மனிதா

மனதில் கொள்
இது நிச்சயம்!

–

திருமதி. அ. அறிவுச்சுடர்,
உதவிப் பதிவாளர்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி 620 024.

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine